பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 28.

சுற்றறிக்கை
எண்.48794/E3/2017 நாள்: 14.12.2017

பொருள்: மதிப்பு குறைவு ஆவணங்கள் இந்திய முத்திரை சட்டப் பிரிவு 47A(1)ன் கீழ் நடவடிக்கை-காலக்கெடு நிர்ணயித்தல்-மேல்நடவடிக்கை -தொடர்பாக

பார்வை: 1.பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண்.36468/சி1/2014 நாள் 01.09.14
2.பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண்.48794/E3/17, நாள் 06.11.17
3.பதிவுத்துறைத்தலைவர் மேலெழுத்து எண்.47535/C2/2017 நாள் 29.11.17 உடன் அனுப்பப்பட்ட அரசாணை எண்.174, வணிகவரி மற்றும் பதிவு(JI) துறை நாள் 28.11.17

******

இந்திய முத்திரைச் சட்டம் 1899, பிரிவு 47 Aன் கீழ் மதிப்பு குறைவு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட ஆவணங்கள் பதிவு அலுவலர்களால் உரிய சந்தை மதிப்பை நிர்ணயித்திட மாவட்ட வருவாய் அலுவலர்(மு)/தனித்துணை ஆட்சியர்(மு)க்கு ஆவணம் பதிவான நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் எனவும் மாவட்ட வருவாய் அலுவலர்(மு)/தனித்துணை ஆட்சியர்(மு) மதிப்பு நிர்ணயத்திற்காக ஆவணம் பெறப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் படிவம் 1 (Form 1) அறிவிப்பு ஆவணதாரருக்கு அனுப்ப வேண்டும் என பார்வை 1 மற்றும் 2ல் காணும் சுற்றறிக்கைகளில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் பார்வை 3ல் காணும் அரசாணையில் தமிழ்நாடு முத்திரை மதிப்பு குறைவு தடுத்தல் விதிகளில் பின்வருமாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**AMENDMENTS**

In the said Rules, -(1) in rule 3, after sub-rule (4), the following sub-rule shall be added, namely:-

"(5) The registering officer shal: refer an instrument under sub-section (1) of section 47-A to the Collector, within fifteen days from the date of registration of such instrument." ; and

2. in rule 4, in sub-rule (1), for the expression "the Collector shall", the expression "the Collector shall, within fifteen days from the date of receipt of such reference," shall be substituted.

VerifiedRealEstate™

எனவே, ஆவணம் பதிவுக்கு தாக்கலான நாளிலிருந்து 15 நாட்களுக்குள் பதிவு அலுவலர்களால் ஆவணங்களை உரிய சந்தை மதிப்பு நிர்ணயம் செய்திட மாவட்ட வருவாய் அலுவலர்(மு)/தனித்துணை ஆட்சியர்(மு) அனுப்பிட வேண்டும் எனவும் மதிப்பு நிர்ணயித்திற்காக பதிவு அலுவலர்களிடமிருந்து ஆவணம் பெறப்பட்ட தினத்திலிருந்து 15 நாட்களுக்குள் படிவம் 1 (Form 1) அறிவிப்பினை மாவட்ட வருவாய் அலுவலர்(மு) தனித்துணை ஆட்சியர்கள் ஆவணதாரர்களுக்கு அனுப்பிட வேண்டும் அனுப்பப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட அறிவுரையை தவறாது பின்பற்றிடவும் உரிய நடவடிக்கை எடுத்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த சுற்றறிக்கையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை சார்பதிவாளர்கள் தொடர்புடைய மாவட்டப்பதிவாளர்களிடமும், மாவட்டப்பதிவாளர்கள் தொடர்புடைய துணைப்பதிவுத்துறைத் தலைவர்களிடமும், துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை)/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் பதிவுத்துறைத்தலைவர் அவர்களிடமும் உடன் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒ-ம்)/-14.12.2017
முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அலுவலர்
மற்றும் பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

பதிவுத்துறைத்தலைவருக்காக

பெறுநர்:
1.அனைத்து சார்பதிவாளர்கள்/மாவட்ட பதிவாளர்கள்
2.அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள்(முத்திரை)/ தனித்துணை ஆட்சியர்கள்(முத்திரை)

நகல் :
1. அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்.
2. முக்கிய ஆணைக்கோப்பு.
3. தனி நகல்-2

Verified RealEstate